**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத்துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்தவேளாண்**
**அறிக்கை**
**(04.10.2023 முதல் 08.10.2023)**

***அறிக்கைஎண் 079/2023*** ***தேதி.03.10.2023***

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

கோயமுத்தூர் மாவட்டத்தின் 29.09.23முதல் 02.10.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 33°C ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 71 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19-25 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்குதிசைவரை பதிவானது.

### கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (29.09.2023 முதல் 02.10.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 08.10.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29/09 | 30/09 | 01/10 | 02/10 | தேதி | நாள்-1 04/10 | நாள்-2 05/10 | நாள்-3 06/10 | நாள்-4 07/10 | நாள்-5 08/10 |
| 10.0 | 13.5 | 18.0 | 14.7 | மழை (மி.மீ) | 0 | 0 | 1 | 2 | 0 |
| 33 | 30 | 31 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 34 | 34 | 35 | 35 |
| 22 | 24 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 24 | 24 | 24 |
| 7 | 7 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 3 | 3 | 3 | 4 | 0 |
| 76 | 72 | 78 | 82 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 71 | 87 | 71 | 73 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| 23 | 25 | 21 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 14 | 14 | 12 | 12 |
| 230 | 200 | 230 | 200 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (04.10.2023 முதல் 08.10.2023)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 06.10.23 மற்றும் 07.10.23 ஆகிய தேதியில் தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **04-10-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **05-10-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **06-10-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **07-10-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **08-10-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு மேற்கு மண்டல உட்பகுதிகளில் இலேசானது முதல் மிதமான மழையுடன் 6-20 கி.மீ வரையிலும் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் நீர் மற்றும் பயிர் சத்துக்கள் உறிஞ்சுவது குறைவாக காணப்படும். ஆதலால் தழைச் சத்து உரங்களை வேப்பபுண்ணாக்கு அல்லது தார் கலந்து இடவேண்டும். இதனால் சத்துக்கள் உபயோகிப்புத்திறன் அதிகமாக இருக்கும். |
| கரும்பு | | வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| பருத்தி | பூக்கும் பருவம் | மழை எதிர்பார்க்கப்படுவதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும் மற்றும் நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும்.<br>மேகமூட்டம் காரணமாக பருத்தியில் தழைவளர்ச்சியனைக் கட்டுப்படுத்த 15வது கணுவிற்குமேல் கிள்ளி விடவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 12-14 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.<br>மேக மூட்டத்துடன் தூறலும் கலந்து காணப்படுவதால் ஒரு சில இடங்களில் மஞ்சளில் சிக்காடோக்கா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து நோய் தென்பட்டால் குளோரோதளானில் 2மிலி அல்லது புரோபிக்கோனொஸோல் 2கி என்ற மருந்தை ஒரு லிட்டர் |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | | காற்றின் ஈரப்பதம் மற்றும் வேகம் அதிகமாக உள்ளதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் பரவ வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 1 கிலோ மேங்கோசெப் அல்லது 1.25 கிலோ காப்பர் ஆக்சி குளோரைடு மருந்தினை தெளிக்கவும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும் மற்றும் நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும். |
| கால்நடை | | தற்போதைய வானிலை கறவை மாடுகளில் மடுவீக்க நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவவும். |

**குறுஞ்செய்தி**

- மணிக்கு 6-20 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**